


RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் டிசம்பர் 29 * 2025 * மலர் -1 * இதழ்-211* VOL-1 * ISSUE-211 விலை ரூ.3 * பக்கம் -4





புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டைஅருகே தமிழ்நாடு அறிவியல் இயக்கம், ஸ்டாலின் நாராயணசாமி பயிற்சி மையம் இணைந்து நடத்தும் 8ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான என்.எம் .எம். ாஎஸ் என்று அழைக்கப்படும் தேசிய வருவாய் வழி திறன் தவித்தொகை பெறும் தேர்விற்கான பயிற்சி முகாமை சட்டமன்ற உறுப்பினர் சின்ன துரை தொடங்கி வைத்தார். நிகழ்விற்கு தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை வட்டாரத் தலைவர் துரையரசன் தலைமை வகி.த்தார்.



தேர்தல் ஆணையத்தின் உத்தரவுபடி வாக்காளர் சிறப்பு சீர்திருத்த, புதிய வாக்காளர்கள் மற்றும்விடுபட்டவாக்காளர்களைசேர்க்கும்சிறப்புமுகாம்,அஸ்தம்பட்டிசிஎஸ்ஐபள்ளியில் நடைபெற்றது. இந்த முகாமில் புதிய வாக்காளர்கள் மற்றும் விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கும் விண்ணப்பங்களை, பிஎல்ஓ அதிகாரிகளின் உதவியுடன் வாக்காளர்கள் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, அதிகாரிகளிடம் வழங்கினர்.



சேலம் கோட்டை மைதானத்தில் 21 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின், சேலம் மாவட்ட தலைவர் இந்தியநாதன் மற்றும் இணைப்பு சங்கங்களின் மாவட்டத் தலைவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் .



# தனியாமங்கலம் கிராமத்தில் 60 ஜோடிகள் பங்கேற்ற மாட்டு வண்டி எல்கை பந்தயம்!

மேலூர் டிச 29

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், தனியாமங்கலம் கிராமத்தின் சார்பில் 37 ம் ஆண்டு மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் தனியாமங்கலம் வெள் ளலூர் சாலையில் நடைபெற்றது.

பெரிய மாடு போட்டியில் 12 வண்டி கள் கலந்து கொண்டன.

புலிமலைப்பட்டி முனிச்சாமி முதல் பரிசு ரூ. 33333 ம், விராமதி அடைக்கலம் இரண்டாம் பரிசு ரூ.22222ம், கோட்டநத் தம்பட்டி ரவி மூன்றாம் பரிசு ரூ.15,555ம், காரைக்குடி சிவா நான்காம் பரிசு ரூ.11,111ம்,அ.வல்லாளபட்டிகாமாட்சி ஐந்தாம் பரிசும் ஆகியோர் வெற்றி பெற் றன.

சிறிய மாட்டு போட்டியில் 48 ஜோடி கள் கலந்து கொண்டன.

போட்டிகள் இரண்டு பிரிவுகளாக நடைபெற்றது. இரண்டு பிரிவுகளில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்க ளுக்கும், பெரிய மாட்டில் நடைபெற்ற பந்தயத்தில்

வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர் களுக்கு விழா குழுவினர் பரிசுத்தொகை யும், வெற்றிக்கோப்பையையும் வழங்கி னர்.

மாட்டுவண்டி பந்தயத்தை வெள்ள லூர், சருகுவலையபட்டி, மட்டங்கி பட்டி, கீழையூர், சாத்தமங்கலம், கோட் டநத்தம்பட்டி, மேலூர் ஆகிய பகுதியிலிருந்து வந்திருந்த மாட்டு வண்டி பந்தய ரசிகர்கள் ரோட்டில் இருபுறம் நின்று ஆரவாரம் செய்து கண்டுகளித் தனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை தனியாமங்க லம் கிராமபொதுமக்கள், இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# வடமாநில தொழிலாளியிடம் பணம் - செல்போன் பறிப்பு!
## 2 பேருக்கு வலைவீச்சு!!

கோவை, டிச.29

பீகாரை சேர்ந்தவர் சஞ்சீவ் பஸ் வான் (33). இவர் வடவள்ளி பகுதி யில் தங்கிருந்து கூலி தொழிலாளியாக வேலை செய்து வருகிறார். நேற்று சஞ்சீவ் பஸ்வான் மற்றும் அவரது நண்பர் தினேஷ் ஆகியோர் சிறுவாணி ரோட்டில் நடந்து சென்று கொண்டு இருந்தனர். தினேஷ் இயற்கை உபாதை கழிக்க செல்வதாக கூறி சென்றார். சஞ்சீவ் பஸ்வான் தனியாக செல்போனில் பேசி கொண்டு நடந்து சென்றார்.

அப்போது அந்த வழியாக பைக்கில் வந்த 2 வாலிபர்கள் திடீரென சஞ்சீவ் பஸ்வானை தடுத்து நிறுத்தினர்.

பின்னர் அந்த வாலிபர்கள் தாங்கள் மறைத்து வைத்திருந்த கத்தை எடுத்து சஞ்சீவ் பஸ்வானின் கழுத்தில் வைத்து பணம் கேட்டு மிரட்டி உள்ளனர்.

அவர் தன்னிடம் பணம் இல்லை என்றுள்ளார். இதனால் அந்த வாலிபர் கள் அவரது சட்டை பாக்கெட்டில் இருந்த ரூ.200 மற்றும் செல்போனை பறித்து தப்பி சென்றனர்.

இதுகுறித்து சஞ்சீவ் பஸ்வான் வட வள்ளி போலீசில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து வழிப்பறி கொள்ளை யர்களை தேடி வருகின்றனர்.

## புதுக்கோட்டை அருகே
# பால் கறக்கச் சென்ற மூதாட்டியை மர்ம நபர் தாக்கி படுகாயம்; 3 சவரன் தங்க செயின் பறிப்பு!

புதுக்கோட்டை டிச.29

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே பூவை மா நகர் அடுத்த அலஞ்சிரங்காடு பகுதியை சேர்ந்த அடைக் கலம் என்பவரது மனைவி சிவ மாலை(69).இவரது கண வர் கடந்த ஓராண்டுக்கு முன்பு உடல் நலக்குறை வால் இறந்து விட்டார் இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தை யும் ஒரு ஆண் குழந்தையும் என மூன்று குழந்தைகள் உ ள்ளது.

இந்நிலையில் நேறு காலை 4 மணிக்கு இவரது வீட்டின் அருகே உள்ள மாட் டுத் தொழுவத்தில் பால் கறப்பதற்கா க சென்றுள் ளார். அப்போது அடையா ளம் தெரியாத நபர் ஒருவர் மூதாட்டி சிவமாலையை இரும்பு கம்பியால் தாக்கி விட்டு அவர் க ழுத்தில் அணிந்திருந்த மூன்று சவரன் தங்க நகையை பறித்துச் சென்றதாக கூறப்படுகிறது.



இதில்படுகாயம்அடைந்த மூதாட்டி சிவமாலையை அருகே இருந்தவர்கள் மீட்டு அறந்தாங்கி அரசு மருத்துவம னையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலை யில் தற் போது அவருக்கு முன் மற்றும் பின் தலை யில் 7 தையல் போடப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில் தான் சம்பவ நடந்த பகுதி அறந்தாங்கி போலீஸ் சரகத்திற்கு உட்பட்டதா? அல் லது கீரமங்கலம் போலீஸ் நிலைய சரகத் திற்கு உட்பட்டதா என குழப்பம் ஏற் பட்டு இரண்டு போலீஸ் நிலையத்திலும் யார் வழக் கை எடுப்பது என்ற பிரச்சனை இருந்து வந்த நிலையில் இரண்டு போலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர்களும் சென் று பார்வையிட்டதாக கூறப்படுகிறது.

அதேபோல் குளமங்கலம் தெற்கு கிராம நிர்வாக அலுவ லர் (பொறுப்பு) அருள்ஜோதி சம்பவ இடத்தை பார்வை யிட்டு சம்பவம் நடந்த பகுதி அறந்தாங்கி போலீஸ் நி லையத்திற்கும் பகுதி கீரமங் கலம் போலீஸ்நிலையத்திற்கு வருவதாக கூறியுள்ளார்.

இதற்கிடையில் கீரமங்கல போலீஸ் இன்ஸ்பெக்டர் பார தி இந்த வழக்கை நாங்கள் எடுத்துக் கொள்ள மாட்டோம் அறந் தாங்கி போலீஸ் நிலையத்திற்கு உட்பட்டது என்று தெரிவித்த நிலையில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் இதனால் வரை அறந்தாங்கி போலீஸ் நிலையத்தில்தான் இந்த பகுதி யைச் சேர்ந்தவர்கள் புகார் கொடுத்துள்ளோம் அதனால் அறந்தாங்கி போலீ சார் இந்த வழக்கை விசா ரிக்க வே ண்டும் என்று தெரி வித்தனர்.இந்நிலையில்தான்தற்பொழுது இந்த வழக்கை கீர ம ங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாரதி வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வரக்கூடிய நிலையில் ஒரு புறம் தனிப்படை போலீ சாரும் விசாரணையை துரிதப் படுத்தி உள் ளனர். அதிகாலையில் பால் கறக்கச் சென்ற மூதாட்டியை இரு ம்பு கம்பியால் தாக்கி மூன்று சவரன் நகையை அடையா ளம் தெரியாத நபர் வழிப்பறி செய்து சென்ற சம்பவம் அந்த கிராம மட்டுமின்றி சுற்று வட்டார பகுதிகளிலும் பரபரப்பை யும் பதட்டத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

## தொடர் விடுமுறையை முன்னிட்டு
# கொடைக்கானலில் குவிந்த சுற்றுலா பயணிகள் ; பெரும்பாலான இடங்களில் போக்குவரத்து நெரிசல்!

கொடைக்கானல், டிச.29

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கா னல் முக்கிய சுற்றுலா இடமாக இருந்து வருகிறது . இங்கு வாரவிடுமுறை மற்றும் தொடர் விடுமுறை ஆகிய நாட்களில் சுற் றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படும் . தற்போது பள்ளிகளுக்கு அரையாண்டு தேர்வு விடுமுறை மற்றும் தொடர் விடுமுறையை தொடர்ந்து சுற்று லாப் பயணிகளின் வருகை கணிசமாக அதிகரித்துள்ளது . இதன் காரணமாக பிர தான சுற்றுலா பகுதிகளாக இருக்கும் தூண்பாறை, குணா குகை, பைன் மரகாடு கள் , மோயர் சதுக்கம் , பசுமை பள்ளத் தாக்கு உள்ளிட்ட சுற்றுலா பகுதிகளில் தழுவி செல்லும் மேகக் கூட்டங்களுடன் சுற்றுலாபயணிகள்தங்களதுசுற்றுலாவை அனுபவித்து வருகின்றனர் . மேலும் கொடைக்கானலில் நிலவும் உரை பனி யையும் சுற்றுலா பயணிகள் கண்டு



மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர். மேலும் திடீரென மாறும் காலநிலையால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர். சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால் பிரதான சாலைகளாக இருக்கும் வத்தலகுண்டு பிரதான சாலை, அப்சர்வேட்டரி சாலை , ஏரிச்சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிக ளில் வாகனங்கள் அணிவகுத்து போக்கு வரத்து நெரிசலானது ஏற்பட்டுள்ளது.



பேருந்து பயணிகளிடம் செல்போன்கள் திருடியவர்களை அவிநாசி போலீசார் கைது செய்தனர்.

# கோவையில் ஆசிரியை வீட்டில் 103 பவுன் நகை கொள்ளை: மர்ம நபர்களை பிடிக்க 3 தனிப்படை !

கோவை, டிச. 29

கோவை குனியமுத்தூர் அடுத்த பி.கே. புதூர் அய்யப்பா நகரை சேர்ந்தவர் ஜெப மார்ட்டின் (45). இவர் குனியமுத்தூர் பகு தியில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரி யராக பணிபுரிந்து வருகிறார்.

இவருக்கு இரு மகள்கள் உள்ளனர். அதில் ஒருவர் கல்லூரியிலும், மற்றொரு வர் பள்ளியிலும் படித்து வருகின்றனர். இந்த நிலையில் கடந்த 24ம் தேதி இரவு ஜெப மார்ட்டினுக்கு அவரது உறவினர் ஒருவர் சாத்தான்குளத்தில் விபத்தில் இறந்து விட்டதாக தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து அவர் அன்று இரவு தனது மகள்களை அழைத்து கொண்டு தூத்துக்குடி மாவட்டம் சாத் தான்குளத்திற்கு சென்றார். அங்கு துக்க நிகழ்ச்சிகளை முடித்து கொண்டு நேற்று காலை வீடு திரும்பினார். அப்போது, வீட்டின் கதவு திறந்திருந்ததைக் கண்டு ஜெப மார்ட்டின் அதிர்ச்சி அடைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது, பீரோ வில் இருந்த 103 தங்க நகைகள் மற்றும் ரூ.10 ஆயிரம் ஆகியவற்றை கொள்ளை யர்கள் திருட்டு சென்று இருந்தது தெரிய வந்தது. இதுகுறித்து ஜெப மார்ட்டின் குனியமுத்தூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார், மோப்ப நாய் மற்றும் கைரேகை நிபுணர்கள் உடன் சம் பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.

அவர்கள் அங்கு பதிவாகி இருந்த கைரேகைகளை சேகரித்தனர். மோப்ப நாய் சிறிது தூரம் சென்று நின்றது. இதை தொடர்ந்து போலீசார் அந்த பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். முதற்கட்ட விசார ணையில் கொள்ளையர்கள் கதவை உடைக்காமல் கள்ளச் சாவியை போட்டு பூட்டை திறந்து உள்ளே சென்று நகை களை திருடி சென்றது தெரியவந்தது. இந்த துணிகர சம்பவத்தை தெற்கு துணை கமிஷனர் கார்த்திகேயன் நேரில் சென்று ஆய்வு செய்து விசாரணை நடத் தினார். மேலும், 3 தனிப்படை அமைத்து கொள்ளையர்களை விரைந்து பிடிக்க உத் தரவிட்டார். ஆசிரியை ஜெப மார்ட்டின் வீட்டில் திருட திட்டமிட்ட கொள்ளை யர்கள் அவர்களது உருவம் பதிவாகாமல் இருக்க அவரது வீட்டின் அருகில் இருந்த வீடுகளின் சிசிடிவி கேமிராக்களை அடித்து உடைத்துள்ளனர்.

சில வீடுகளில் சிசிடிவி கேமிராக்களின் வயர்களை அறுத்து துண்டித்துள்ளனர்.

இதேபோல படுக்கை அறையில் இருந்து பீரோவில் நகைகளை கொள் ளையடித்த திருடர்கள் அதனை அங்கி ருந்த தலையணை உறையில் போட்டு கொண்டு தப்பி சென்றுள்ளனர்.








# ராமநாதபுரம் அருகே வல்லபை ஐயப்பன் ஆலய மண்டல பூஜை விழா!

ராமநாதபுரம், டிச.29

ராமநாதபுரம் மாவட்டம் ரெகுநாதபுரம் வல்லபை ஐயப்பன் ஆலய மண்டல பூஜை நேற்று அதிகாலை 4 மணிக்கு கோ பூஜையுடன் தொடங்கியது. இதை தொடர்ந்து 4:30 மணிக்கு பள்ளி உணர்த்தல், கணபதி ஹோமம் நடந்தது. 8 மணிக்கு தொடங்கிய பேட்டை துள்ளலில் ஐயப்ப பக்தர்கள் ஆடியவாறு பஜனை பாடல்கள் ஊர்வலமாக பஸ்மக் குளம் வந்தனர். அங்கு வல்லபை ஐயப்பனுக்கு ஆராட்டு நடந்தது. இதன் பின் ஐயப்பன் உருவச்சிலை சுமந்து ஐயப்ப பக்தர்கள், பொதுமக்கள் ஊர்வலம் புறப்பட்டு கோயிலை வந்தடைந்தனர். நடந்தன. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். இதை தொடர்ந்த கொடி இறக்கப்பட்டு, மஹா அபிஷேகம் நடந்தன. நீண்ட வரிசையில் நின்று பக்தர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அன்னதானம் பெற்றுச் சென்றனர். ஆலய தலைமை பக்தர் மோகன் சாமி தலைமையில் ஸ்ரீ வல்லபை ஐயப்ப சேவை அறக்கட்டளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் ஏற்பாடு செய்தனர்.

# வனதிருப்பதி கோவிலில் நாளை சொர்க்கவாசல் திறப்பு விழா!

தூத்துக்குடி டிச.29

தூத்துக்குடி மாவட்டம் குரும்பூர் புன்னைநகர் வனத் திருப்பதி சீனிவாச பெருமாள், ஆதிநாராயணர், சிவன ணைந்த பெருமாள் கோயிலில் வரும் 30ம் தேதி வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடைதிறப்பு, அதிகாலை 5.30 மணிக்கு கோபூஜை, காலை 6 மணி முதல் அனந்தசயன சேவை (திருவாரதனம், சாத்துமுறை கோஷ்டி, மதியம் 1 மணிக்கு உற்சவர் திருமஞ்சனம், மாலை 5 மணிக்கு சகஸ்கர நாம அர்ச்சனை, மாலை 5.30 மணிக்கு சாய ரட்சை பூஜை, மாலை 6 மணிக்கு சொர்க்க வாசல் திறப்பு நிகழ்ச்சி நடக்கிறது. மாலை 6.30 மணிக்கு சீனிவாச பெருமாள் ஷேச வாகனத்தில் வீதியுலா நடக்கிறது. ஏற்பாடுகளை கோயில் மேலாளர் வசந்தன் செய்து வருகிறார்.

# பைக் டயரை சேதப்படுத்தியதை தட்டிக்கேட்ட தம்பதிக்கு மிரட்டல்!

கோவை,டிச.29

கோவை பாப்பநாயக்கன்பாளையம் வடக்கு அம்மன் நகரை சேர்ந்தவர் விஜயன். இவரது மனைவி சண்முகபி ரியா (43). இவரது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் அசினா. அவர் வீடு கட்டி வருகிறார். இதனால் கட்டிட பணிக்கு தேவையான கற்கள், மணல், மரக்கட்டைகளை சாலை யில் போட்டு வைத்துள்ளனர். இதனை கடந்த சில நாட் களுக்கு முன்பு மாநகராட்சி அதிகாரிகள் அப்புறப்படுத்தி பறிமுதல் செய்தனர். இதற்கு காரணம் சண்முகபிரியா என நினைத்து அசினாவின் குடும்பத்தினர் அவரிடம் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்தநிலை யில் கடந்த 16ம் தேதி விஜயன் தனது பைக்கை வீட்டின் முன் நிறுத்தி உள்ளே சென்றார். சிறிது நேரம் கழித்து வெளியே வந்து பார்த்த போது அசினா, பைக்கின் டயரை கத்தியால் குத்தி கிழித்து கொண்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனே அவர் அசினாவை தடுத்து நிறுத்தி அவரை, தட்டி கேட்டார். இதனால ஆத்திரம் அடைந்த அசினா மற்றும் அவரது குடும்பத்தினர் விஜ யன் மற்றும் சண்முகபிரியாவை தகாத வார்த்தைகளால் திட்டி மிரட்டி சென்றனர். இதுகுறித்து சண்முகபிரியா நேற்று ரேஸ்கோர்ஸ் போலீசில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் போலீசார் அசினா மற்றும் அவரது குடும்பத்தினர் குடி, அவரது கணவர் மற்றும் கவிதா ஆகி யோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வரு கின்றனர்.

# கடையில் சென்ட் பாட்டில் திருடிய இளம்பெண்!

கோவை, டிச. 29

கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் ஒரு பேன்சி கடை உள்ளது. அங்கு கடந்த 24ம் தேதி இரவு பெண் ஒருவர் வந்துள்ளார்.

அவர் அங்கு இருந்த பொருட்களை பார்வையிட் டார். பின்னர் அந்த பெண் பில் பதிவு செய்யும் கணினி டேபிள் அருகே வந்து நின்று அங்கும், இங் கும் நோட்டமிட்டார்.

அப்போது யாரும் பார்க்காத நேரத்தில் நைசாக அந்த டேபிளில் இருந்த செண்ட் பாட்டிலை திருடி கொண்டு வெளியே சென்றார்.

இந்நிலையில் கடை உரிமையாளர் சிசிடிவி கேமரா காட்சிகளை பார்த்த போது பெண் ஒருவர் செண்ட் பாட்டிலை திருடி செல்வதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். அந்த சிசிடிவி கேமிரா காட்சி கள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளி ஒன்றியம், அரசம்பட்டி ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் முத்தமிழ் அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கான பூமிபூஜையை மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். போச்சம்பள்ளி ஒன்றிய கழக செயலாளர் சாந்தமூர்த்தி உள்ளிட்ட திமுக தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட, சப்ஜெயில் ரோடு நகராட்சி நடுநிலைப்பள்ளியில், வாக்கு சாவடி எண் 165,166,1 67 ஆகிய வாக்கு சாவடி மையங்களில் நடைபெற்று வரும் வாக்காளர்பட்டியல்சிறப்புதீவிரதிருத்தம்2026சிறப்புமுகாமைமாவட்டதேர்தல்அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## புதுக்கோட்டை அருகே

# அரசு மகளிர் பள்ளிக்கு விலையில்லா மிதிவண்டி உதிரி பாகங்கள் பொருத்தும் பணி மும்முரம்!



புதுக்கோட்டை டிச.29

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில் படிக்கும்: மாண விகளுக்கு தமிழக அரசால் இலவசமாக வழங்கக்கூடிய சைக்கிள் பொரு த்தும் பணி ஆலங்குடி அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் கடந்த 20 தினங்களுக்கு மேலாக மும்முரமாக நடைபெ வருகிறது.

ஆலங்குடி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளது .இப்பள்ளி யில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிவியர்கள் பயின்று வருகி ன்றனர் இப்பள்ளிக்கு ஆண்டு தோறும் தமிழக அரசால் இலவச மாக வழங்கக்கூடிய விலையில்லா மிதிவண்டி வழங்கும் சிறப்பு நடைபெற் று வருகிறது.

இந்நிலையில் 2026 ம் ஆண்டு ஜனவரியில் அனைத்து மாணவிக ளுக்கும் விலையில்லா இலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்வு ந டைபெற இருக்கிறது. 2026ல் தேர்த ல் நடைபெற உள்ள நிலையில் பள்ளி மாணவர்களுக்கு தமிழக அரசால் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்வு தேர்தலுக்கு முன்னர் இலவசமாக தமிழக அரசு விரைவில் சுமார் 600 மிதி வண்டிகளை வழங்க உள்ளது.

இதையடுத்து அதற்கு உண்டான அனைத்து விலையி ல்லா மிதி வண்டிகளின் உதிரி பாகங்களும் வளாகத்தி ல் உள்ள பள்ளி ஒரு அறையில் வைக்கப் பட்டு உள்ளது.

இந்த உதிர் பாகங்களை விலையில்லா மிதி வண்டிக ளாக (சைக்கிளாக) வடமாநிலத்தை சேர்ந்த ஐந்துக்கும் மேற்பட்டோர் கடந்த 20 தினங்களாக சைக்கிள் உஉதிரி பாகங்களை பொருத்தம் பணிகள் நடத்தி வருகின்றது.

இதையத்து தற்போது நூற்றுக்கும் அதிகமான விலையி ல்லா மிதி வண்டிகள் தயார் நிலையில் உள்ளது.மீதமுள்ள மிதிவண்டிகளை பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

விலையில்லா மிதிவ ண்டிகள் அனைத்தும் பொருத்தும் பணிககள் முடிந்து பள்ளி மா ணவிகளுக்கு விரைவில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்க ப்பட உள்ளது.



# ராமநாதபுரத்தில் செங்கோட்டை நுழைவாயிலுடன் கூடிய தாஜ்மஹால் பொருட்காட்சி தொடக்கம்!

ராமநாதபுரம்,டிச. 29

ராமநாதபுரம் கேணிக்கரை மகர் நோன்பு பொட்டல் நல்லம்மாள் திடலில் தமிழகத்தில் புகழ் பெற்ற ஸ்ரீ சாய் ராம் என்டர்டெயின்மென்ட் நிறுவனம் சார்பில், செங்கோட்டை நுழைவாயிலுடன் கூடிய தாஜ்மஹால் கண்காட்சி, வீட்டு உபயோகப் பொருட்களுடன் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பொருட்காட்சி ஒரு மாதம் வரை நடைபெறுகிறது. இக்கண்காட்சியை ராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்து ராமலிங்கம் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார், செ.முருகேசன் எம்எல்ஏ, ராமநாதபுரம் நகர்மன்ற தலைவர்ஆர்.கே.கார்மேகம்,துணைத் தலைவர் டி.ஆர்.பிரவீன்தங்கம் முன்னிலை வகித்தனர், ஸ்ரீ சாய்ராம் என்டர்டெயின்மென்ட் நிறுவன உரிமையாளர் எம்.கே.உதயகுமார். வரவேற்றார்.

தொழிலதிபர் ஹூமாயுன், ஹமீது, நவீத், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில்

பிரமாண்டமான 120 அடி நீளத்திற்கு தத்துரூபமாக செங்கோட்டை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து உள் வளாகத்தில் காண்போர் வியக்கும் வகையில் தாஜ்மஹால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அனைவரும் செல்ஃபி எடுத்துக் கொள்ளவும் தனி

இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் முதல் பெரியோர் மகிழும் விதமாக ராட்சத ராட்டினங்கள், குழந்தைகள் சறுக்கு விளையாட்டு, பேய் வீடு, எண்ணற்ற வீட்டு உபயோகப் பொருட்கள் அரங்குகள், உண்டு மகிழ உணவு கூடங்கள் உள்ளன.

தினமும் மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை இப்பொருட்காட்சி நடைபெறகிறது.

## கொடைக்கானலில்

# பெண் கூலி தொழிலாளியை தாக்கிய காட்டெருமை!

கொடைக்கானல், டிச.29

கொடைக்கானல் கீழ்மலை பகுதியான கே.சி.பட்டி ஊராட்சி பகுதியை சேர்ந்த பெண் கூலி தொழிலாளியை காட்டெருமை தாக்கியதால் படுகாயமடைந்தார்.



கே.சி.பட்டி ஊராட்சிக்குட்பட்ட குப்பம்மாள்பட்டியைச் சேர்ந்த பிரபு என்பவரின் மனைவி சாந்தி வயது 35, கூலித்தொழிலாளியாக வேலை பார்த்து வருகின்றார்.

இவர் இப்பகுதியில் உள்ள பாலன் என்பவரின் தோட்டத்தில் கூலி வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது திடீரென வந்த காட்டெருமை சாந்தியை கடுமையாக தாக்கியது.

தாக்கியதில் பலத்த காயமடைந்த அவரை அக்கம்பக்த்தினர் மீட்டு பாச்சலூர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

தற்போது பெருகி வரும் வன விலங்குகளால் நாளுக்கு நாள் மனித விலங்கு மோதல் அதிகரித்துள்ளது.

இதனால் உயிர் இழப்புகள், சேதங்கள் ஏற்படும் சூழல் உள்ளது. வனத்துறையினர் காட்டு விலங்குகளை கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து தரப்பு மக்களின் கோரிக்கையாக உள்ளது.



# வத்தலகுண்டுவில் ஐயப்ப பக்தர் அலகு குத்தி தேர் இழுத்து வழிபாடு!

வத்தலகுண்டு,டிச.29

வத்தலகுண்டுவில் சபரிமலை அய்யப்பனுக்கு மாலை அணிந்து விரதம் இருக்கும் அய்யப்ப பக்தர்கள் ஒவ்வொரு ஆண்டும் அலகு குத்தி தேர் இழுத்து வழிபாடு நடப்பது வழக்கம். அதன்படி இந்த ஆண்டும் அலகு குத்தி தேர் இழுத்து வழிபாடு நிகழ்ச்சி நடந்தது. இதையொட்டி அய்யப்ப பக்தர்கள் மஞ்சளாற்று விநாயகர் கோவிலில் சிறப்பு பூஜை செய்தனர்.பின்னர் அலகு குத்தியும் அய்யப்பசாமி உருவப்படம் வைக்கப்பட்ட தேரை இழுத்து ஊர்வலமாக சென்று வழிபாடு நடத்தினர். ஊர்வலத்தில் ஏழு சிறுமிகளை சக்தி பெண்களாக பாவித்து அவர்களை முன்னாள் நடந்து செல்லவிட்டு அவர்களுக்குப் பின்னால் அய்யப்ப பக்தர்கள் சென்றனர்.மஞ்சளாற்று விநாயகர் கோவில் முன்பு தொடங்கிய இந்த ஊர்வலம் வத்தலகுண்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று கோவில் வந்தடைந்தது. பின்னர் கலியுக வரத ஐயப்ப கோவில் பக்தர்கள் சார்பில் அன்னதானம் நடைபெற்றது.விழா ஏற்பாடுகளை கோவில் குரு சாமிகள் செய்திருந்தனர்.

# தூத்துக்குடியில் கஞ்சா விற்ற 2 பேர் கைது!

தூத்துக்குடி டிச.29

தூத்துக்குடி தாளமுத்துநகர் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் முத்துராஜா ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது தாளமுத்துநகர் பஜாரில் சந்தேகப்படும்படியாக நின்ற 2 பேரை பிடித்து விசாரணை நடத்தியதில் அவர்கள் தூத்துக்குடி தாளமுத்துநகர், சிலுவைப்பட்டி பகுதியினை சேர்ந்த மணி மகன் ஜெகன் (வயது 20), சிலுவைப்பட்டி கொடிமரத்தெருவை சேர்ந்த முத்துராஜ் மகன் சங்கரலிங்கம்(33) என்பதும், அவர்கள் 2 பேரும் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதும் தெரியவந்தது. உடனடியாக போலீசார் 2 பேரையும் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து சுமார் 20 கிராம் கஞ்சா மற்றும் மோட்டார் பைக்கையும் போலீசார் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புஞ்சை புளியம்பட்டி அருகே

# டீக்கடையில் லாட்டரி சீட்டு விற்பனை செய்தவர் கைது!

புளியம்பட்டி,டிச.29

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி நம்பியூர் சாலையில் காங்கேரி பள்ளம் குட்டீஸ் பேக்கரி அருகே செண்பக ஊர் சேர்ந்த விஜயகுமார் என்பவர் கேரள மாநிலம் லாட்டரி சீட்டு எண்களை எழுதி விற்பனை செய்துள்ளார் தகவல் அறிந்து சம்ப வ இடத்திற்கு சென்ற புளியம்பட்டி போலீசார் விஜயகுமார் நாட்டை சீட்டு நம்பர் எழுதிக் கொண்டிருந்தபோது கையும் களவுமாக பிடித்துள்ளனர் மேலும் அவரிடமிருந்த 4000 ரூபாய் பணம் கைப்பற்றப்பட்டு அவர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி உள்ளார் புஞ்சை புளியம்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் கேரளா லாட்டரி சீட்டுகள் மூன்று நம்பர் எழுதிக் கொண்டு செல்போன் ஆன்லைனில் ஆங்காங்கே விற்பனை அமோகமாக நடைபெறுகிறது அதுமட்டுமன்றி தமிழக அரசால் தடை செய்யப்பட்டு ஹான்ஸ் குட்கா பான் மசாலா போன்ற போதை பொருட்கள் புளியம்பட்டி பகுதியில் பப்ளிக்காக செய்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.



ஈரோட்டில் வாஜ்பாய் படத்துக்கு பா.ஜ.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்





# தென்காசி மாவட்டத்தில் ஈர நிலப்பறவைகள் கணக்கெடுப்புப்பணி!

## கலெக்டர் தொடங்கி வைத்தார்!!

தென்காசி, டிச.29

தென்காசி மாவட்டம், மத்தளம் பாறை, மாரநேரி குளத்தில் தென்காசி வனக்கோட்டத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான நீர் நில வாழ் பறவைகள் கணக்கெடுப்புப்பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர். துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தென்காசி வனக்கோட்டத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான நீர் நில வாழ் பறவைகள் கணக்கெடுப்புப்பணியினை துவைக்கப்ப ட்டுள்ளது. கணக்கெடுப்புப் பணி இரு தினங்கள் நடைபெற்றது .

தென்காசி வன கோட்டத்தில் உள்ள 27 குளங்களில் இந்த பறவைகள் கணக்கெடுப்பு முகாம் நடைபெறவுள்ளது. மேலும், வெளிநாடுகளில் இருந்து இனப்பெருக்கத்திற்காக வரும் பறவைகளையும் கணக்கெடுக்கும் படும். இந்த பறவைகள் கணக்கெடுப்பு பணிகளில் வனப்பணியாளர்கள், சமூக நல ஆர்வலர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் ஆகியோர் இணைந்து கணக்கெடுக்கும் பணி மேற்கொள்வார்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர். தெரிவித்தார்.

இந்நிகழ்வில், உதவி வன பாதுகாப்பு காவலர்நெல்லைநாயகம், தென்காசி மணச்சரக அலுவலர் செல்லத்துரை, வனவர் சங்கர் ராஜா மற்றும் தன்னார்வலர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிறிஸ்துமஸ் விழாவையொட்டி அமைச்சர் கீதாஜீவன் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!



தூத்துக்குடி,டிச.29

கிறிஸ்தவர்களின் முக்கிய பண்டிகையான கிறிஸ்துமஸ் விழாவையொட்டி கடற்கரை சாலையில் உள்ள பனிமய மாதா ஆலயத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவிற்கு பனிமய மாதா பங்கு தந்தை ஸ்டார்வின் தலைமை வகித்தார். பனிமய மாதா ஆலய வளாகத்தில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் கண்கவரும் வகையில் நடைபெற்றது. வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் நிகழ்ச்சியை கண்டு களித்தார். பின்னர் அப்பகுதியில் உள்ள 2 பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அமைச்சர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர்கீதாஜீவன் பேசுகையில்: இந்த பனிமய மாதா ஆலயத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கு கொண்டதில் மகிழ்ச்சி அடைகிறேன். எவ்வித ஏற்றத் தாழ்வும் இல்லாத அன்னையின் அருள் எல்லோருக்கும் கிடைத்திட வேண்டும். ஏழை எளியவர்களுக்கு உதவிகள் செய்வது கடவுளுக்கு செய்யும் சேவையாகும். நாம் செய்கின்ற ஒவ்வொரு நல்ல உதவிகளும் அன்பும் தான் எல்லோரையும் அரவணைத்து நல்லவழிகளுக்கு நம்மை அழைத்து செல்லும். அவர்களது வாழ்வில் ஒளிவிளக்கேற்றும் வகையில் திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டா லின் மீன்பிடி தடைக்காலத்தில் வழங்கப்படும் உதவித்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. டீசல் மானியம் வழங்கப்படுகிறது. மீன்பிடி துறைமு கத்தில் பல்வேறு கட்டமைப்பு பணிகளை உருவாக்கிக் கொடுத்துள்ளோம். எப்போதெல்லாம் திமுக ஆட்சி அமைகிறதோ அதுதான் மக்களுக்கான ஆட்சியாக இருந்து வருகிறது. ஒவ்வொரு திட்டங்களையும் திட்டமிட்டு செயல்படுத்தி வருவதன் மூலம் இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலமாக தமிழகம் இருந்து வருகிறது. எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் தமிழக மக்கள் பயனடைந்து வருகின்றனர். சிறுபாண்மை மக்களின் அரணாக திமுக எப்போதும் இருக்கும். திமுகவை பொறுத்தவரை எல்லா மதத்தையும் மதிக்கிறோம். மதவெறியைத்தான் எதிர்க்கிறோம். நாம் அனைவரும்ஒருவருக்கொருவர்அன்பை பரிமாறி சமத்துவத்தை உருவாக்குவோம். திமுக அரசுக்கு முழுமையான ஆதரவை தொடர்ந்து நீங்கள் வழங்க வேண்டும் என்று பேசினார்.

# ஈரோடு அருகே இருசக்கர வாகனத்தில் இருந்து மயங்கி விழுந்த போலீஸ் ஏட்டு சாவு!

ஈரோடு,டிச.29

அந்தியூர் தவிட்டுப்பாளையத்தை சேர்ந்தவர் கமலக்கண்ணன் (45) ஊட்டி டவுன் போலீஸ் ஸ்டேஷனில் ஏட்டாக பணியாற்றி வருகிறார்.

இவர் விடுமுறையில் சொந்த ஊருக்கு வந்தார்.இவரது தந்தை பழனிச்சாமிக்கு உடல்நலம் சரியில்லாததால் ஈரோட்டில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற பைக்கில் அழைத்துக் கொண்டு வந்தார். ஈரோடு அருகே அசோகபுரம் பகுதியில் வந்த போது இருசக்கர வாகனத்தில் இருந்து திடீரென மயங்கி விழுந்தார்.அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் அவரை மீட்டு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அவரைப் டாக்டர்கள் சோதனை செய்து கமலக்கண்ணன் மாரடைப்பால் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதில் அவரது தந்தை பழனிச்சாமி லேசான காயம் அடைந்ததை தொடர்ந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது .இது குறித்து கருங்கல்பாளையம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மாரடைப்பால் இறந்த போலீஸ் ஏட்டு கமலக்கண்ணனுக்கு சத்யா என்ற மனைவியும் இரண்டு மகன்களும் உள்ளனர்.

## கேரளாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

# சுற்றுலா பஸ்சில் ஒலிபெருக்கிகள் திருடிய 2 பேர் பிடிபட்டனர்!

பவானி.டிச.29

கேரளா மாநிலம் பாலக்காடு அருகே உள்ளமன்னார்காடு பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு சுற்றுலா பஸ்ஸில் இருந்த விலை உயர்ந்த ஆடியோ சிஸ்டங்களைதிருடிக் கொண்டு ஒரு கன்டெய்னர் லாரி மூலம் அறியலாம் மாநிலத்துக்கு தப்பிச் செல்வதற்காக சித்தோடு போலீசருக்குகேரளா போலீசார் தகவல் தெரிவித்தனர். அதைத்தொடர்ந்து சித்தோடு போலீசார் சித்தோடு தேசிய நெடுஞ்சாலையில் சக்தி மெயின்ரோடுபகுதியில் தடுப்புகள் அமைத்து வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக கேரளா போலீசார் தெரிவித்த கண்டெய்னர் லாரியும் அரியானா மாநில பதிவெண் கொண்ட டேங்கர் லாரி வந்து கொண்டிருந்தன இதனால் அந்த வாகனங்களை போலீசார் தடுத்து நிறுத்தி சோதனை நடத்தினர்.

அப்போது பஸ்ஸில் பொருத்தப்பட்டிருந்த விலை உயர்ந்த ஆடியோ சிஸ்டம் ஆம்ப்ளிபையர் மற்றும் 4 ஸ்பீக்கர்கள்இருந்த அவற்றை பறிமுதல் செய்த போலீசார்2பேரைபிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள் அரியானா மாநிலத்தை சேர்ந்த ஆதில்(20) கதோபி(38) ஆகியோர் என்பதும் இவர்கள் பாலக்காடு பகுதியில் எலக்ட்ரிக் யகடையில் வேலை செய்து வந்ததும்.

அரியானா லாரி டிரைவருடன் ஏற்பட்ட பழக்கத்தை பயன்படுத்தி சுமார் ரூ.60 ஆயிரம் மதிப்பிலான ஆடியோ சிஸ்டத்தை திருடி வந்ததும் தெரியவந்தது. இதைத்தொடர்ந்து இரண்டு பேரையும் சித்தோடு போலீசார் கேரள போலீஸிடம் ஒப்படைத்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகிநகர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மாண்புமிகு மேயர் ஆர்.பிரியா, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்அரவிந்த் ரமேஷ், தெற்கு வட்டார துணை ஆணையாளர்அஃதாப் ரசூல், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை இயக்குநர் சோமசுந்தரம், கூடுதல் இயக்குநர் சம்பத், மண்டல குழுத் தலைவர்மதியழகன், நகர நல அலுவலர் ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டம் தேவாங்கர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 பணிகளில் வாக்காளர் பட்டியல் புதியதாக பெயர் சேர்க்க, பெயர் நீக்கம் செய்ய, பெயர் திருத்தம், முகவரி மாற்றம் தொடர்பான சிறப்பு முகாம் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் என்.ஓ.சுகபுத்ரா, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.








